# DEPOSITION OF WITNESS

In the Special Court for trial of cases under Prevention of Corruption Act,

Tiruchirappalli.

## SPECIAL CASE NO.17/2013.

Deposition of Witness for Prosecution / Defense – **P.W.08. (L.W.08)**

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.S.S.ராஜா |
| Father's / Husband Name | : | Thiru.M.சாமிநாதன் |
| Village & Taluk | : | திருவரம்பூர் |
| District | : | திருச்சி |
| Age | : | 57/2026. |

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act (44 of 1969) of the day of Dated :– 19.06.2026.

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 01.20 P.M.

**முன் விசாரணை –**

நான் தற்போது திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு 2 அலுவலகத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஜுன் 2009 முதல் ஜனவரி 2012 வரை திருவரம்பூர் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது முதல் நிலை காவலராகவும், தலைமை காவலராகவும், அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 2010 முதல் நிலைய எழுத்தராக பணிபுரிந்தேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் முதல் நிலை காவலராகவும், தலைமைக் காவலராகவும் திருவரம்பூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தார்.

பாஸ்போர்ட் வெரிபிகேசன் சம்பந்தமாக விஜிலென்ஸ் போலீசார் ஆஜர் எதிரியை கைது செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைது குறிப்பாணையில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கைது குறிப்பாணையில் உள்ள 1வது கையெழுத்து அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து சரிபார்த்தல் மற்றும் பரிந்துரைக்காக விண்ணப்பங்கள் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். மாவட்ட காவல் அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரரின் வசிப்பிடத்தை பொருத்து அந்தந்த காவல் நிலையத்திற்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு வரும் விண்ணப்பங்கள் நாங்கள் பராமரிக்கும் பதிவேட்டில் பதிவு செய்வோம். அவ்வாறு பதிவு செய்யும்போது விண்ணப்பத்திற்கு கொடுக்கும் எண்ணையும், விண்ணப்பத்தின் எண்ணையும், விண்ணப்பதாரரின் முகவரியையும் பதிவு செய்வோம்.

விண்ணப்பங்கள் அதிகமாக வரப்பெற்றால் ஒவ்வொரு காவலர்களுக்கும் ஐந்து ஐந்து விண்ணங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். சம்பந்தப்பட்ட காவலர் முகவரிக்கு சென்று விண்ணப்பதாரர் மற்றும் அருகில் உள்ளவர்களை விசாரணை செய்து, விண்ணப்பதாரரை அடையாளம் காட்டும் ஆவணங்களுடன் இரண்டு சாட்சிகளை அழைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு வரும்படி சொல்லிவிட்டு வருவார்கள்.

காவல் நிலையத்திற்கு விண்ணப்பதாரர் வந்த பிறகு அவரை விசாரித்து, அவரது புகைப்படத்தை அந்த பதிவேட்டில் ஒட்டி, கையொப்பம் பெறுவார்கள். உடன் வரும் சாட்சிகள் விண்ணப்பதாரரின் முகவரி பற்றிய விவரங்களை எழுதி கொடுப்பார்கள். பின்னர் விசாரணை செய்த காவலர்

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

அந்த நபர்களை அவரது அடுத்த நிலை உயர் அதிகாரியான உதவி ஆய்வாளரிடம் ஆஜர்படுத்துவார்கள். உதவி ஆய்வாளர் தனது முறையில் விசாரணை செய்து கையொப்பமிட்டு, ஆய்வாளரிடம் பார்வைக்கு வைக்கப்படும். ஆய்வாளர் அவற்றை சரிபார்த்துவிட்டு பாஸ்போர்ட் வழங்குவதை பற்றி பரிந்துரை வழங்குவார்.

என்னிடம் காட்டப்படும் பாஸ்போர்ட் ரிஜிஸ்டர் நான் திருவரம்பூர் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது 2011ம் ஆண்டில் பராமரிக்கப்பட்டதுதான். அந்த பதிவேட்டில் பக்கம் 150 முதல் 153 வரை ஏற்கனவே அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பதிவேட்டில் வரிசை எண்.1273 முதல் 1277 வரை உள்ள விண்ணப்பங்கள் தலைமை காவலர் 726 ஆக பணியாற்றிய நாராயணசாமிக்கு ஒதுக்கப்பட்டது. வரிசை எண்.1274 முதல் 1277 வரையிலான விண்ணப்பங்களை சித்திரவேல் விசாரணை செய்து அறிக்கை கொடுத்தார். விஜிலென்ஸ் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை – ( எதிரி தரப்பில் ) –**

விஜிலென்ஸ் போலீசார் உங்களை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால், சம்பவம் நடந்து பத்து நாள்கள் கழித்து 02.12.2012 ல் விசாரணை செய்தார். வரிசை எண்.1274 முதல் 1277 வரை சித்திரவேலுக்கு விண்ணப்பம் விசாரணைக்கு ஒதுக்கப்பட்டதற்கு அ.த.சா.ஆ.10 பதிவேட்டில் எவ்வித குறிப்பும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். விசாரணைக்கு செல்லும் தலைமை காவலர் உத்தரவு பிறப்பிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். தலைமை காவலர் விசாரணை செய்து ஆவணங்களை பெற்று வருவார்.

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

தலைமை காவலர் நாராயணசாமி தற்போது எங்கு வேலை பார்க்கிறார் என்றால் தெரியாது. இந்த விண்ணப்பங்கள் சரிபார்ப்பதை பொருத்து உங்களுக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மாலை திருவெறும்பூம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் அனைவரும் மாலை வேலையில் திருவெறும்பூர் பகுதியில் ரோந்து பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். குறிப்பாக மேம்பாலம் பகுதியில் அதிகப்படியான காவலர்கள் ரோந்துப்பணியில் இருப்பார்கள் என்றால் அனைத்து பகுதிகளிலும் ரோந்து பணியில் இருப்பார்கள். திருவெறும்பூர் காவல் நிலையத்தில் CCTV கேமரா பொறுத்தப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. CCTV கேமரா பொருத்தப்பட்டிருந்தால் எத்தனை மணிக்கு சித்திரவேல் வந்தார் எத்தனை மணிக்கு விஜிலென்ஸ் போலீசார் வந்தார்கள். அங்கு என்ன நிகழ்வு நடந்தது என்பவை பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.

திருவெறும்பூர் மேம்பாலத்திலிருந்து, திருவெறும்பூர் காவல் நிலையம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ஒரு கிலோ மீட்டருக்குள் இருக்கும். நீங்கள் எத்தனை மணிக்கு பணியில் இருந்தீர்கள் என்பதை பொருத்தோ, சித்திரவேல் எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தார் என்பதை பொருத்தோ, விஜிலென்ஸ் போலீசார் எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தார்கள் என்பதை பொருத்தோ விஜிலென்ஸ் ஆய்வாளரின் விசாரணையின்போது நேரம் குறிப்பிட்டு சொன்னீர்களா என்றால் சொன்னேன். நான் விஜிலென்ஸ் ஆய்வாளரின் விசாரணையின்போது நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நிலைய எழுத்தர் அறையிலிருந்த பார்த்தால் மற்றொரு அறை தெரியாது என்றால் சரிதான்.

கைது குறிப்பாணையில் உங்களுடன் சேர்ந்து வேறு யார்

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

கையெழுத்து செய்தார்கள் என்றால் என்னுடன் பணிபுரிந்த காவலர் சாலமன் என்பவர் கையெழுத்து செய்தார். வேறு யார் கையெழுத்து செய்தார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. சித்திரவேல் கைது செய்யப்பட்டதை உங்களிடம் தகவலாக தெரிவித்தார்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை–இல்லை.**

விசாரணை முடிவுற்ற நேரம் : 01 : 52 P.M.

Special Court for trial of cases under Prevention of Corruption Act, Tiruchirappalli

Taken over by me in open court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct

Puviyarasu V

Digitally signed by Puviyarasu V
Date: 2026.06.19 16:09:19 +0530

Special Judge,
Special Court for trial of cases under
prevention of Corruption Act,
Tiruchirappalli.